**கிராமின் கிருஷி ம aus சம் சேவா**
இந்தியா வானிலை ஆய்வு துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 29-07-2022**

**திருவள்ளூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2022-07-29 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2022-07-30 | 2022-07-31 | 2022-08-01 | 2022-08-02 | 2022-08-03 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 0.0 | 3.0 | 28.0 | 55.0 | 65.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 36.0 | 36.0 | 35.0 | 34.0 | 32.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 28.0 | 27.0 | 27.0 | 25.0 | 23.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 80 | 90 | 90 | 90 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 40 | 40 | 50 | 50 | 50 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 8.0 | 8.0 | 10.0 | 10.0 | 12.0 |
| காற்றின் திசை (கோணம்) | 270 | 270 | 270 | 280 | 280 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 4 | 6 | 8 | 8 | 8 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

ஜூலை- 31 முதல் ஆகஸ்ட் 3 ஆம் தேதி வரை லேசான முதல் கன மழைப்பொழிவு எதிர் பார்க்கலாம்; காற்றின் வேகம் மணிக்கு சுமார் 8.0-12.0 கி.மீ என்றளவில் வீசக் கூடும்; காற்றானது மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்; அதிகபட்ச வெப்பநிலை முறையே 32.0°C-36.0°C-ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை முறையே 23.0°C-28.0°C-ஆகவும் எதிர் பார்க்கலாம்; காலை நேரங்களில் நிலவும் காற்றின் ஒப்பு ஈரப்பதம் முறையே 80-90%-ஆகவும் மற்றும் மாலை நேரங்களில் நிலவும் காற்றின் ஒப்பு ஈரப்பதம் முறையே 40-50%-ஆகவும் காணப்படலாம்.

## பொது ஆலோசனை:

07.08.2022 முதல் 14.08.2022 வரை தமிழ்நாட்டில் மழை இயல்பை விட அதிகமாகவும், குறைந்தபட்ச வெப்பநிலை இயல்பாகவும் மற்றும் அதிகபட்ச வெப்பநிலை இயல்பை விட குறைவாகவும் இருக்கும்.

## குறுஞ்செய்தி :

பயிர்களுக்கு முறையான வடிகால் வசதி அமைக்கவும் மற்றும் உரம் இடுதல் மற்றும் பூச்சிக்கொல்லி களைக்கொல்லி தெளிப்பதை தவிர்க்கவும்

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | சொர்ணவாரி பட்டம்- நெற்பயிர்- வளர்ச்சி பருவம்-1.தண்டுத்துளைப்பான்- ஏக்கருக்கு அசாடிராக்ட்டின் 0.03% 400 மில்லி லிட்டர் வீதம் அல்லது ஏக்கருக்கு ப்ளூபெண்டியாமைடு 20% WP 50 கிராம் வீதம் என்ற வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். 2. பாக்டீரியா இலைக்கருகல் நோய் -ஆரம்ப நிலை- ஏக்கருக்கு காப்பர் ஹைட்ராக்ஸிட் 77 WP 500 கிலோ கிராம் வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம் மற்றும் நோய் தீவிர நிலையில்- ஏக்கருக்கு ஸ்ட்ரெப்டோமைசின் சல்பேட் + டெட்ராசைக்ளின் 120 கிராம் மற்றும் காப்பர் ஆக்ஸிகுளோரைடு 500 கிராம் கலவையினை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்; 3.இலை சுருட்டுப்புழு- ஏக்கருக்கு அசாடிராக்ட்டின் 0.03% 400 மில்லி லிட்டர் வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். அல்லது வேப்பங்கொட்டைச்சாறு 5 சதம் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். (மழைப்பொழிவினை சரிபார்த்து பின் தெளிப்பினை மேற்கொள்ளவும்) |
| நெல் | சொர்ணவாரி பட்டம்- நெற்பயிர்-பூக்கும் பருவம்- 1.நெற்பழம்- ஏக்கருக்கு ப்ரோபிகோனாசால் 25 EC @ 200 மில்லி லிட்டர் வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். அல்லது 50% பூக்கும் தருணம் மற்றும் கதிர் வரும் பருவத்தில் ஏக்கருக்கு காப்பர் ஹைட்ராக்சைட் 77 WP @ 500 கிராம் வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்; 2.பழுப்புப்புள்ளி நோய்- நோய் அறிகுறி கண்டவுடன் மெடோமினோஸ்டாபின் 200 மில்லி லிட்டர் வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். (மழைப்பொழிவினை சரிபார்த்து பின் தெளிப்பினை மேற்கொள்ளவும்) |
| நெல் | நெற்பயிர்-சம்பா பட்டம்- இரக தேர்வு- 1. ADT- 54 - BPT 320 மாற்றாக சம்பா பருவத்திற்கு ஏற்ற ரகமாகும், 130-135 நாட்கள் கொண்ட நடுத்தர கால பயிராகும், மற்றும் மத்திய சன்ன ரக தானியம், குருத்து பூச்சி மற்றும் மற்றும் குலை நோய்க்கு மிதமான எதிர்ப்பு திறன் கொண்டது, மானாவாரி/ மானாவாரி புழுதிகால் சாகுபடியில் நேரடி நேரடி நெல் விதைப்பிற்கேற்ற ரகமாகும்; 2. CR1009 Sub 1 இரகமானது வடிகால் குறைவான மற்றும் தாழ்வான நீர் தேங்கிய நிலையினை தாங்கி வளரும், 140-180 நாட்கள் கொண்ட நீண்ட கால பயிராகும். சிறிய குண்டு ரக நெல், புகையான், வெள்ளை தத்துப் பூச்சி தாக்கம் மற்றும் பழுப்புப்புள்ளி, குலை நோய்க்கு மிதமான எதிர்ப்பு திறன் கொண்டது, |
| கரும்பு | கரும்பு- இடைக்கணுப்புழு - முட்டை ஒட்டுண்ணியான டிரைகோகிரம்மா கைலோனிஸ் அட்டையை ஏக்கருக்கு 2.5 சி.சி/ என்ற வீதம் 15 நாட்களுக்கு ஒரு முறை என்றவாறு 4வது மாதத்திலிருந்து வயலில் கட்டி விட வேண்டும். மற்றும் அதிகப்படியான நைட்ரஜன் உரமிடுதலைத் தவிர்க்கவும். இதனால் இலை தீதலில் இருந்து தவிர்களாம். இப்பூச்சியின் முட்டைகள் இருப்பின் அவற்றை சேகரித்து அழித்து விடவும்.150 மற்றும் 210வது நாட்களில் முறையாக சோகை உரித்தல் வேண்டும். (மழைப்பொழிவினை சரிபார்த்து பின் தெளிப்பினை மேற்கொள்ளவும்) |
| வெண்டை/ லேடிஸின் விரல் | வெண்டை- விதை நேர்த்தி- விதைப்பதற்கு 24 மணி நேரத்திற்கு முன்பு ஒரு கிலோவுக்கு 4 கிராம் ட்ரைக்கோடெர்மா விரிடியினை கொண்டு நேர்த்தி செய்யவேண்டும். பின்பு விதைகளை 400 கிராம் அசோஸ்பைரில்லம் கலவையுடன் கலக்க வேண்டும். நிழலில் ஆறவைத்த அரிசிக் கஞ்சியுடன் அசோஸ்பைரில்லம் தூளை நன்கு கலக்க வேண்டும். பிறகு இந்தக் கலவையில் வெண்டை விதையை நன்கு கலந்து அரை மணி நேரம் உலர வைக்க வேண்டும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| மிளகாய் | மிளகாய்-நாற்றழுகல்- ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் ட்ரைகோடெர்மா விரிடி என்ற வீதம் கலந்து விதை நேர்த்தி செய்யலாம். அல்லது விதைப்பதற்கு 24 மணி நேரத்துக்கு முன் ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் சூடோமோனாஸ் ஃப்ளோரன்ஸிஸ் என்ற வீதம் கலந்து விதை நேர்த்தி செய்யலாம். |
| கத்திரிக்காய் | கத்தரி- நாற்றழுகல்- ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் ட்ரைகோடெர்மா விரிடி என்ற வீதம் கலந்து விதை நேர்த்தி செய்யலாம். அல்லது விதைப்பதற்கு 24 மணி நேரத்துக்கு முன் ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் சூடோமோனாஸ் ஃப்ளோரன்ஸிஸ் என்ற வீதம் கலந்து விதை நேர்த்தி செய்யலாம். |

## பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை:

| பிற ( மண்/ நில தயாரிப்பு) | பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பொது ஆலோசனை | 1.காற்றின் வேகம் சில நேரங்களில் அதிகமாக இருக்க வாய்ப்புள்ளதால், எளிதில் முறியக்கூடிய முருங்கை மற்றும் வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும். 2. விவசாயிகள் முதிர்ச்சி அடைந்த பயிர்களை அறுவடை செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறது மற்றும் அறுவடை செய்த பயிர்களை கிடங்குகளில் அல்லது தார்பாய்கள் கொண்டு மூடி பத்திரபடுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. |